# இலங்கை தமிழ்ச் சமூக ஊடகப்பரப்பில் “சுட்டன்கள்”

**தனுஷியா, இ., பூங்குழலி, சி.**
ஊடகக்கற்கைகள் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
r.thanushiya30@gmail.com

*தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில், மக்கள் மத்தியில் தகவல்களை, செய்திகளை பகிர்ந்து கொள்ள பல சமூக ஊடகப்பிரயோகங்கள் புழக்கத்திற்கு வந்துள்ளன. முகநூலில் பதிவேற்றப்படும் தகவல்கள், செய்திகளில் சுட்டன்களின்*(Memes) *செல்வாக்கு அதிகரித்து வந்துள்ளதை ஆய்வாளரால் அவதானிக்க முடிந்தது. பயனர்கள் மத்தியில் அதிகரித்து வரும் சுட்டன்களின் பரவுகையானது பல்வேறு கருப்பொருட்களின் (சமூகம், அரசியல், பொருளாதாரம்,பொழுதுபோக்கு,கல்வி) ஊடாக பயனர்களின் உளவியல், நடத்தை ரீதியில் அவர்கள் கொண்டிருக்கும் உணர்வு நிலைகளை வெளிக்காட்டும் வகையில் உருவாக்கப்படுவதையும், அக் கருப்பொருட்களில் கையாளப்படும் உள்ளடக்க விடய தானங்கள், மொழி, படங்கள், மற்றும் குறியீடுகள் ஆகிய உள்ளடக்கக் கூறுகள் சார்ந்து அச்சுட்டன்கள் செயற்படும் விதம் பற்றிய புரிதல் உருவாக்குநர்கள் மத்தியில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற் கொள்ளப்படுகின்றது. ஆய்வு, மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழ்ச் சமூக ஊடகப்பரப்பின் முகப்புத்தகத் தளத்தில் சுட்டன் பக்கங்களைக் கொண்டுள்ள, யுனி மீம்ஸ் ஸ்ரீலங்கா*(Uni Memes Srilanka), *சாரு மீம்ஸ்*(Saru Memes), *நினைச்சா கவல மீம்ஸ்*(Niniacha kavala Memes), *மிக்கி மீம்ஸ்* (Mickey Memez) *ஆகிய தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள சுட்டன்கள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு, அவை கருப்பொருள் வகைப்பாட்டின் அடிப்படையில் அச்சுட்டன் பதிவுகளின் கூறுகள் (மொழி,படங்கள்,குறியீடுகள்) உள்ளடக் கப்பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இத் தளங்களில் ஒருவருட காலத்தில் பதிவேற்றப்பட்ட 1614சுட்டன்கள் ஆய்வாளரால் அவதானிப்பிற்குட்படுத்தப்பட்டன, குறித்த சுட்டன்களில் இருந்து 100மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன, நான்கு சுட்டன் உருவாக்குனர்கள், ஐம்பது முகநூல் பயனர்களின் நேர்காணல்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டன. அவை குறுக்குப்பரிசோதனை செய்து பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டன. இலங்கைத்தமிழ்ச் சமூக ஊடகப்பரப்பில், முகநூல் பக்கங்களில் பகிரப்படும் சுட்டன்கள் பெரும்பாலும் உள்ளடக்க ரீதியில் தனிப்பட்ட ரீதியாக ஒருவரை குறிவைத்துத் தாக்குவதாகவே அமைகின்றன. சுட்டன்களில் சினிமாப்பிரபலங்களின் புகைப்படங்களே பெரும்பாலும் பிரயோகிக்கப்படுகின்றன. சுட்டன்கள் பெரும்பாலும் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தும் வகையிலே முன்வைக்கப்படுகின்றன. இதன் மூலம் ஒருவருடைய உணர்வு நிலைகள் கேலிக்குள்ளாக்கப்படுகின்றன. சுட்டன்களின் காட்சிப்படங்கள், உண்மையை விபரிப்பனவாகவும், ஏனையவை சினிமாப்பாணியில் அமைந்த வார்ப்புருக்களைக் கொண்ட காட்சிப்படங்களாகவுமே அமைகின்றன. மொழிநடையானது, விடய ரீதியான சொற்களையும், வசன நடைகளையும் பயன்படுத்தியுள்ளதோடு, ஏனையவற்றிற்கு சினிமாப்பாணியிலான மொழிப்பாவனையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நகைச்சுவை நடிகர்களின் புகைப்படங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளதை காண முடிகின்றது. மேலும், முகநூலில் பயனர்கள் சுட்டன்களிற்கு வழங்கும் விருப்பக் குறியீடுகள்*(Like),